23rd August 1960]

THE HON. SRI P. KAKKAN : பம்பையாறுக்கும் இந்த எக்ரிமென்ட்டுக்கும் சம்பந்தம் இல்லை.

Political agitation

***410 Q.—SRI A. VEDARATHNAM :** கனம் உள்ளிவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் உள்ள அரசியல் கட்சிகள் கூட்டணி ஏற்படுத்தி, அதன் மூலம் பலாத்காரப் புரட்சி நடத்தப் போவதாகப் பொதுக்கூட்டங்களில் பேசி வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(ஆ) அப்படியானல், அதன் விவரமென்ன ?

(இ) அதற்கு அரசாங்கம் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No. Sir.

(*b*) & (*c*) Does not arise.

SRI A. VEDARATHNAM : சில அரசியல் கட்சியார்கள் தஞ்சை ஜில்லாவில் பலயிடங்களில் பலாத்கார பிரசாரம் செய்து கொண்டு வருகிறார்களே. இப்பொழுது எல்லையில் நெருக்கடி இருக்கிற இந்த சமயத்தில் இந்த மாதிரி பிரசாரம் செய்ய அனுமதிப்பது சரியா ? அப்படியானல் ஸி.ஐ.டி. ரிப்போர்ட் கொண்டு தெரிந்து அப்படி பிரசாரம் செய்கிறவர்களை தடை செய்து, அப்படி பிரசாரம் செய்கிற கட்சியை சட்ட விரோதமான கட்சி என்று "டிக்ளேர்" செய்ய முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஏமாற்றம் அடைகிற அரசியல் கட்சிகள் பிரமாதமாகப் பேசலாம். அந்தப் பேச்சை அரசாங்கம் பிரமாதமாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனல் உருப்படியாக பலாத்காரத்தைத் தூண்டும் வகையில் யார் பேசினாலும் நடந்து கொண்டாலும் அப்போதைக்கப்போது கவனம் செலுத்தி அமைதியை நிலைநாட்ட வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டுத்தான் வருகிறது.

SRI A. A. RASHEED : Sir, on a point of order. The Hon. Minister has stated that the statement relating to the Parambikulam Project has been placed on the table of the House. But no statement has been placed on the table of the House.

MR. SPEAKER : I have got a copy of it.

SRI A. A. RASHEED : But I have not got a copy of it.

SRI N. MAHALINGAM : Sir, I have got a copy of it.

MR. SPEAKER : Anyhow it is with all of us except the hon. Member, Sri Rasheed.

[23rd August 1960

SRI K. ANBAZHAGAN : அரசியல் கட்சிகள் எவையேனும் இப்படிப்பட்ட பலாத்கார உணர்ச்சியைத் தூண்டுகிறதா என்ற குறிப்பு கேள்வியில் காணப்படுகிறது. அப்படி எந்த அரசியல் கட்சியைப் பற்றியாவது கருத இடம் உண்டா? அதற்காக ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசியல் கட்சி பலாத்காரத்தைத் தூண்டுவது என்பதல்ல. அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் பலாத்காரத்தைத் தூண்ட முற்படலாம். அப்படி நடந்து கொள்ளும்போது வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் என்று சொன்னேன்.

SRI R. CHIDAMBARA BHARATHI : மேடைகளில் அரசியல் கட்சிகள் பலாத்காரத்தைத் தூண்டுவதாக, அந்த முறையில் பேசப் படுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்களே. அப்படி பேசப்பட்டு வரும் பிரசங்கங்களை ரிக்கார்ட் செய்து சர்க்கார் வைக்கிறதா? அவர்கள் பேசிய பேச்சுக்களை ரிக்கார்ட் செய்து, அந்தப் பிரசங் கங்களைப் பதிவு செய்து வைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் ஏதாவது செய்யப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அங்கத்தினர் அவர்கள் கூறியபடி நான் சொல்லவில்லை. யார் அமைதியைக் குலைக்கும் வகையில், பலாத்காரத்தைத் தூண்டி விடும் வகையில் பேசினாலும் அப்போதைக்கப்போது கவனம் செலுத்தப்பட்டு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது, எடுத்துக் கொள்ளப்படுமென்றுதான் சொன்னேன்.

SRI K. ANBAZHAGAN : இப்பொழுது பொது மேடைகளில் ஆளும் கட்சியைச் சார்ந்த, காங்கிரஸ் கட்சிக்காரர்கள் பலர் பலாத்கார உணர்ச்சியைத் தூண்டி விடும்படி பேசுகிறார்கள். அதுபற்றிய குறிப்புகளை அரசாங்கம் இதுவரை பெற்றிருக்கிறதா? இனியாவது காங்கிரஸ்காரர்கள் பேசுவதைக் குறிப்பு எடுத்து அனுப்பும்படி அரசாங்கத்தார் கேட்டுக்கொள்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்த கட்சியினராக யிருந்தாலும் சரி, காங்கிரஸ் கட்சிக்காரர்களாகயிருந்தாலும் சரி, பலாத்காரத்தை தூண்டுவது பற்றி தகவல் கிடைத்தால் நட வடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் பட்டுத்தான் வருகிறது.

SRI S. THANGAVELU : திராவிட முன்னேற்றக்கட்சிக்காரர்கள், இந்த மன்றத்தில் "ஹானரபிள் மினிஸ்ட்டர்ஸ்" என்று அழைக்கப் படும் அமைச்சர்களைப் பற்றி பொது மேடைகளில் அவருக்கு இந்த முகம், இவருக்கு இந்த முகம் என்று மரியாதைக் குறைவாகப் பேசுகிறார்களே, அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுவதை விட மோசமாகப் பேசியிருப்பதாக அரசாங்கத்தினிடம் தகவல் இருக்கிறது. ஆனால் இதற்கெல்லாம் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் படவில்லை.